

SUGATHADASA NATIONAL SPORTS COMPLEX AUTHORITY

P.O.BOX 2211 AUTHUR DE SILVA MAWATHA

COLOMBO 13

Designed by : Susantha Wickramasuriya
(Sugathadasa Stadium)

SUGATHADASA NATIONAL SPORTS COMPLEX AUTHORITY    ANNUAL REPORT - 2011

# සුගතදාස ජාතික ක්‍රීඩා සංකීර්ණ අධිකාරිය

## சுகததாச தேசிய விளையாட்டுப் பல்தொகுதி அதிகாரசபை

## SUGATHADASA NATIONAL SPORTS COMPLEX AUTHORITY



# වාර්ෂික වාර්තාව

# ஆண்டறிக்கை

# ANNUAL REPORT 2011

Incorporated by the act of Parliament No.17 of 1999

சுகததாஸ தேசிய விளையாட்டு பல்கூட்டுத் தொகுதி அதிகார சபை


| | |
|---|---|
| | பக்க எண் |
| தகவல் ஒன்றிணைப்பு | 2 |
| விளையாட்டரங்கு நிருவாக முகாமைத்துவம் | 3 |
| எமது நோக்கும் செயற்பணியும் | 4 |
| அதிரசபை ஸ்தாபித்தல் | 5 |
| அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | 6 |
| இந்த அதிகார பொறுப்புக்களும் கருமங்களும் | 7 |
| வசதிகள் மற்றும் சேவைகள் வழங்கும் துறைகள் | 8 |
| சுகததாஸ உள்ளக விளையாட்டரங்கு | 9 |
| உள்ளக விளையாட்டரங்கு | 9 |
| துணை விளையாட்டரங்கு | 10 |
| நீச்சல் தடாக தொகுதி | 11 |
| உடல் வளர்ச்சி மத்திய நிலையம் | 12 |
| விளையாட்டு உணவகம் | 12 |
| சுகததாஸ வெளிவாரி விளையாட்டரங்கு | 13 |
| ஆர். பிரேமதாஸ கிரிக்கெட் விளையாட்டரங்கு | 14 |
| போகம்பர வெளிவாரி விளையாட்டரங்கு | 15 |
| பெலியத்த மற்றும் வீரகெட்டிய நீச்சல் தடாகங்கள் | 16 |
| நுவரெலியா குதிரைப் பந்தய அரங்கு | 17 |
| நிறுவனத்தின் மொத்த முன்னேற்றம் | 18 |
| கணக்கீட்டுக் கொள்கைகள் | 19 |
| வருமானம், செலவினக் கூற்று | 24 |
| ஐந்தொகை | 24 |
| காசுப் பாய்ச்சல் கூற்று | 26 |
| கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை. | 27 |

## தகவல் ஒன்றிணைப்பு

### நிறுவனத்தின் பெயர்

சுகததாஸ தேசிய விளையாட்டுப்
பல் தொகுதி அதிகார சபை

சுகததாஸ தேசிய விளையாட்டுப்
பல் தொகுதி அதிகார சபை
சட்ட ரீதியாக மீளத் தாபித்தல்

1999 ம் ஆண்டின் 17 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் சட்டமாக்கப்ப்ட்டது.

முகாமைத்துவ சபை
(2011 ஜனவரி தொடக்கம் ஜுலை வரை)

| | |
|---|---|
| திரு. ரொனீ இப்ராஹிம் | தலைவர் |
| திரு எஸ்.எஸ்.என் த சில்வா | அங்கத்தவர் |
| திரு நவின் பெரேரா | அங்கத்தவர் |
| திரு சமல் பெரேரா | அங்கத்தவர் |
| திரு பீ. ஹதுருசிங்ஹ | அங்கத்தவர் |
| விமா கொமான்டர் பீ.டி.அபேசூரிய | அங்கத்தவர் |
| ஏஎஸ்பி. பீ. நிசல் ரத்நாயக்க | அங்கத்தவர் |
| திரு நிமல் வீரதுங்க | அங்கத்தவர் |
| பிரிகேடியர் திரு பீ.டப்ளிவ்.பீ.சமரதுங்க | அங்கத்தவர் |
| திரு மனு சன்முகம் | அங்கத்தவர் |
| திரு பண்டுக கீர்த்திநந்தன | அங்கத்தவர் |
| திருமதி கயனி சீ. வித்தான | செயலாளர் |


<u>முகவரி:</u>
சுகததாஸ தேசிய விளையாட்டரங்கு
கட்டிடத் தொகுதி அதிகார சபை,
த. பெ. 2211,
ஆதர் த சில்வா மாவத்தை,
கொழும்பு 13.

தொலைபேசி இல : 011-2445677
011-2422841, 011-2384490, 2384385
பெக்ஸ் : 011-2445675
இல: நகல் : sugathad@sltnet.lk


<u>முகாமைத்துவ சபை</u>
<u>(2011 ஆகஸ்ட்)</u>

| | |
|---|---|
| திரு. நிமல் மித்திரரத்ன | தலைவர் |
| திரு மனுல சமல் பெரேரா | அங்கத்தவர் |
| திருமதி எம்.டி. ரஞ்சனி ஜயகொடி | அங்கத்தவர் |
| விமா கொமான்டர் புவனேக தேசப்பிரிய | அங்கத்தவர் |
| ஏஎஸ்பி. பீ. நிசல் ரத்நாயக்க | அங்கத்தவர் |
| திரு மனு சன்முகம் | அங்கத்தவர் |
| திரு பண்டுக கீர்த்திநந்தன | அங்கத்தவர் |
| திருஎச்.எம்.எம்.எஸ். பண்டார ஹேரத் | அங்கத்தவர் |
| திருமதி கயனி சீ. வித்தான | செயலாளர் |

<u>முகாமைத்துவ சபை</u>
<u>(2011 செப்டம்பர் தொடக்கம் )</u>

| | |
|---|---|
| திரு.பிரிகேடியர்பீ.டப்ளிவ்.பீ.சமரதுங்க ஆர்எஸ்பீ. யுஎஸ்பீ. ஏரீபி. | தலைவர் |
| திரு.நிமல் மித்திரரத்ன | அங்கத்தவர் |
| திரு எம்பீ.டி.யு.கே. மாபா பத்திரன | அங்கத்தவர் |
| திருமதி எம்.டி. ரஞ்சனி ஜயகொடி | அங்கத்தவர் |
| திரு மனுல சமல் பெரேரா | அங்கத்தவர் |
| விமா கொமான்டர் புவனேக தேசப்பிரிய | அங்கத்தவர் |
| ஏஎஸ்பி. திரு பீ. நிசல் ரத்நாயக்க | அங்கத்தவர் |
| திரு மனு சன்முகம் | அங்கத்தவர் |
| திரு பண்டுக கீர்த்திநந்தன | அங்கத்தவர் |
| திருஎச்.எம்.எம்.எஸ். பண்டார ஹேரத் | அங்கத்தவர் |
| திரு. சந்திரசேன ஹேவா அதபத்து | செயலாளர் |

<u>கணக்காய்வு</u>
கணக்காய்வாளர்அதிபதி
கணக்காய்வாளர் திணைக்களம்
இல: 306/72 பொல்தூவ,
பத்தரமுள்ள.

விளையாட்டரங்கு நிருவாக முகாமைத்துவம்

| | | |
|---|---|---|
| திரு.பிரிகேடியர்பீ.டப்ளிவ்.பீ.சமரதுங்க ஆர்எஸ்பீ. யுஎஸ்பீ. ஏரீபி. | - | தலைவர் |
| திரு. லெப்டினனட் கேனல் எல்.எச்.எம். ராஜபக்ஷ ஆர்எஸ்பீ | - | பணிப்பாளர் |
| திருமதி எச்.எம். நில்மினி கே ஹேரத் | - | உதவிப் பணிப்பாளர் |
| திரு. ஏ.என். சமரசிங்ஹ | - | உதவிப பணிப்பாபாளர் (விளையாட்டு) |
| திரு சமிந்த கே. உடகும்புர | - | உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்) |
| திருமதி பீ.ஸீ. ஜானகி | - | உள்ளக கணக்காய்வாளர் |
| திருமதி சீ.ஜே.அத்துகோரளை | - | முகாமையாளர்(பராமரிப்பு) |
| திரு.கே. பந்துதிலக்க | - | முகாமையாளர் (நிருவாகம் / தகவல் தொழில் நுட்பம்) |
| திருமதி பீ.டி.என். பிரபா கிரிஎள்ள | - | முகாமையாளர்(உள்ளக) |
| திரு சம்பத் பெரேரா | - | முகாமையாளர்(வெளிவாரி) |
| செல்வி நெரஞ்சலா பீ மொரகொட | - | முகாமையாளர் (சந்தைப் படுத்தல்) |
| திருமதி. கே.பீ.ஜி.நில்மினி | - | முகாமையாளர் (பெறுகை) |
| திரு. டி.சீ.வசன்த அமரசேகர | - | முகாமையாளர் (கணக்கு) |
| திரு எச்.ஏ.ரொஷான் குமார | - | முகாமையாளர் (போகம்பர) |
| மேஜர் திரு.எச்.பீ. உபாலி | - | முகாமையாளர் (பாதுகாப்பு) |

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு.

| | | |
|---|---|---|
| திரு எம்பீ.டி.யு.கே. மாபா பத்திரன | - | தலைவர் |
| திரு. மனு சன்முகம் | - | அங்கத்தவர் |
| திரு. பி.டி. அபேசூரிய | - | அங்கத்தவர் |
| திரு. ஈ.ஏ.பீ. ஆனந்த | - | அங்கத்தவர் |
| திரு. எஸ்.பீ. விஜேரத்ன | - | அங்கத்தவர் |
| திருமதி கே பீ. பீ. பெர்னாந்து | - | அங்கத்தவர் |
| திருமதி பீ. ஸீ. ஜானகி | - | செயலாளர். |

வங்கி

இலங்கை வங்கி

கிரான்ட்பாஸ் கிளை.

## எமது நோக்கு மற்றும் எமது செயற்பணி




ஆசியாவிலே முதலாம் தர சர்வதேச மட்டத்திலான விளையாட்டு வசதிகள் கொண்ட விளையாட்டு பல் கூட்டுத் தொகுதியொன்றாக சுகததாஸ விளையாட்டு பல் கூட்டுத் தொகுதி அதிகார சபையை ஆக்குதல் மற்றும் அதன் கீழ் உள்ள ஏனைய விளையாட்டுப் பல்கூட்டத் தொகுதிகளையும் மேம்படுத்துவதன் ஊடாக இலங்கையின் விளையாட்டு அபிவிருத்திக்கான வசதிகளை சலுகை அடிப்படையில் பெற்றுக் கொடுத்தல்.

## எம்மிடமுள்ள செயற்பணி



சர்வதேச மட்டத்திலான வசதிகளை வழங்குவதன் ஊடாக இலங்கையின் விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்தல் மற்றும் இலங்கை விளையாட்டு வீர, வீராங்கனைகளின் திறமையை வடிவமைப்பதற்கும் தேவையான வசதிகள் கொண்ட ஆசியா கண்டத்திலேயே சர்வதேச மட்டத்திலான வசதிகள் கொண்ட முதன்மையான விளையாட்டுப் பல்கூட்டுத் தொகுதியாக்குதல்.

## சுகததாஸ தேசிய விளையாட்டு பல்கூட்டுத் தொகுதி அதிகாரசபை ஸ்தாபித்தல்

சுகததாச தேசிய விளையாட்டு பல்கூட்டுத் தொகுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஒன்றாக 1995.02.01ம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும் விதத்தில் விளையாட்டு அமைச்சுக்கு சுவீகரிக்கப்பட்டுள்ளதுடன், 1999 ஏப்ரல் 20ம் திகதியன்று சுகததாச தேசிய விளையாட்டு பல்கூட்டு அதிகார சபையாக அமைக்கப்படுவதற்கான சட்டமூலம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. கூறப்பட்ட சட்டம் 1999.09.01ம் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் விதத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், அத்திகதி தொடக்கம் இந்த தேசிய விளையாட்டு பல்கூட்டுத் தொகுதியானது “சுகததாச தேசிய விளையாட்டு பல்கூட்டுத் தொகுதி அதிகார சபை” என தாபிக்கப்பட்டது.

இந்த அதிகார சபையின் முகாமைத்துவ நடவடிக்கைகள் விளையாட்டு விடயப்பொறுப்பு அமைச்சரினால் நியமிக்கப்பட்ட முகாமைத்துவ சபையொன்றின் மூலம் செய்யப்படுவதுடன் அச்சபை கீழ்க் கண்டவாறாகும்.

1. தலைவர் ï விளைாட்டு விடயப் பொறுப்பு அமைச்சரினால் நியமிக்கப்படும்
2. விளையாட்டு விடயப்பொறுப்பு அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது பிரதிநிதியொருவர்
3. தேசிய அரச சபையின் 1973ம் ஆண்டின் 25ம் இலக்க விளையாட்டுச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்படும் விளையாட்டு பணிப்பாளர் நாயகம்
4. திறைசேரியின் பிரதிநிதியொருவர்
5. இதற்கு மேலதிகமாக விளையாட்டு விடயப் பொறுப்பு அமைச்சரினால் நியமிக்கப்படும் 07 அங்கத்தவர்கள்

## அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்

மேலே குறிப்பிடப்பட்ட முகாமைத்து சபை அங்கத்தவர்களுக்கு மேலதிகமாக நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு ஒழுங்கு விதிகளின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட நிரந்தர ஊழியர் எண்ணிக்கை 328 ஆகும். 2011.12.31ம் திகதியன்று அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையில் நிறுவனத்தில் சேவையாற்றியோரின் எண்ணிக்கை 79% ஆகும். அதனை கீழ் கண்டவாறு விரிவாக காண்பிக்கக் கூடியதாக உள்ளது.

| இல. | பதவி | 2011-12-31 திகதியன்று ஊழியர் எண்ணிக்கை | அங்கீகரிக்கப்பட்ட நிரந்தர ஊழியர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | பணிப்பாளர் | 01 | 01 |
| 02 | பிரதிப் பணிப்பாளர் | - | 01 |
| 03 | உதவிப் பணிப்பாளர் | 02 | 04 |
| | சார்ந்த உத்தியோகத்தர்கள் | | |
| 04 | உள்ளக கணக்காய்வாளர் | 01 | 01 |
| 05 | தகவல் தொழில் நுட்ப உத்தியோகத்தர் | 01 | 01 |
| 06 | பராமரிப்பு உத்தியோகத்தர் | 01 | 01 |
| 07 | பெறுகை உத்தியோகத்தர் | 01 | 01 |
| 08 | சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் | 01 | 01 |
| 09 | நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர் | 05 | 05 |
| | முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்ப) | | |
| 10 | தொழில்நுட்ப உதவியாளர் | - | 02 |
| | முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாத) | | |
| 11 | முகாமைத்துவ உதவியாளர் | 26 | 35 |
| 12 | மைதான திட்டமிடுபவர் | 01 | 01 |
| 13 | வேலைப் பரிசோதகர் | 01 | 02 |
| 14 | விளையாட்டு உத்தியோகத்தர் / விளையாட்டு பயிற்றுவிப்பவர் | 04 | 09 |
| 15 | பிரதான பாதுகாப்பபு உத்தியோகத்தர் / பாதுகாப்பு உத்தியோகத்தர் | 14 | 20 |
| | ஆரம்ப நிபுனத்ததுவம் | | |
| 16 | சாரதி | 07 | 06 |
| | ஆரம்ப பகுதி நிபுனத்ததுவம் | | |
| 17 | தச்சர், மேசன், குழாய் பொறுத்துனர், வர்ணம் தீட்டுபவர் | 09 | 15 |
| 18 | இமின்சார தொழில்நுட்பவியளர் | 01 | - |
| 19 | ஏவலாளர் | 01 | 02 |
| | ஆரம்ப பகுதி நிபுனத்ததுவம் அல்லாத | | |
| 20 | விளையாட்டரங்கு உதவியாளர் | 97 | 110 |
| 21 | அலுவலக சிற்றூழியர் | 02 | 10 |
| 22 | பாதுகாப்பு உத்தியோகத்தர் (ஆண் / பெண்) | 92 | 100 |
| | முழு மொத்தம் | 268 | 328 |

# இவ்வதிகாரசபையின் பொறுப்புக்களும் கருமங்களும்

*பொறுப்புகள்*

1. முகாமைத்துவம் செய்தல், பராமரித்தல் மற்றும் தேசிய சொத்தொன்றாக அதனைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைளை மேற்கொள்ளல்.
2. சகல சேவைகள் மற்றும் வசதிகளை பேணி வருதல்.
3. கட்டிடங்களுக்களுக்கும் கட்டமைப்புகளுக்கும் தேவையான மேம்படுத்தல்கள் அல்லது மாற்றங்களைச் செய்தல்.
4. இலங்கைப் பிரஜைகளுக்கு விசேடமாக , இலங்கையின் இளைஞர் யுவதிகளுக்கு விளையாட்டுகளில் தங்களது திறமைகளை மேம்படுத்திக் கொள்ளுதல் மற்றும் தங்களது உடல் வளர்ச்சி மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்திக் கொள்ளக் கூடிய விதத்தில், சபையினால் விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக வசதிகளை அவர்களிடையே பகிர்ந்தளித்தல்.
5. விசேடமாக கிராமியப் பிரிவுகளில் விளையாட்டுகளை மேம்படுத்திக் கொள்ளும் நோக்குடன் விளையாட்டுக்ள பற்றிய பயிற்சிப் பாடநெறிகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் நடாத்துதல்.
6. தேசிய மற்றும் சர்வதேச விழாக்களுக்குத் தேவையான வசதிகளை முகாமைத்துவ சபையினால் விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாகப் பெற்றுக் கொடுத்தல்.
7. இலங்கையில் விளையாட்டுகள் மற்றும் பொழுது போக்கு வசதிகளை மேம்படுத்துவனை நோக்காகக் கொண்டு, சர்வதேச மறறும்தேசிய விளையாட்டுப பயிற்சி அமைப்புகள் மற்றும் விளையாட்டு நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பையும் தொடர்புகளையும் ஏற்படுத்திக் கொள்ளல்.
8. எமது அதிகார சபையின் வசதிகளை, முகாமைத்துவ சபையினால் விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக, நியாயமான கட்டணங்களுக்குப் பாடசாலைகளுக்கும் இளைஞர் விளையாட்டுக் கழகங்களுக்கும் மற்றும் விளையாட்டு நிறுவனங்களுக்கும் வழங்குதல்

*கருமங்கள்*

மேற்கூறப்பட்ட பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு எமது அதிகார சபையினால் கீழ்க்காணும நடைமுறைகள் பின்பற்றப்படுவதுடன் விளையாட்டுச் சங்கங்கள். பாடசாலை விளையாட்டுச் சங்கங்கள் மற்றும் அரசாங்கம் போன்றே தனியார் நிறுவனங்க்ளுக்கம் முகாமைத்துவ சபையினால் அங்கீகரிக்கப்பட்ட சலுகைக் கட்டணங்களின் கீழ் சேவைகள் மற்றும் வசதிகள் வழங்கப்படும்.

1. தேசிய மற்றும் சர்வதேச வியைாட்டரங்கு விளையாட்டு வீர, வீராங்கனைகளைப் பயிற்றுவிப்பதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்.
2. சர்வதேச மட்டத்திலான போட்டிகள் பகல் நேரங்களில் போன்றே இரவு நேரங்களிலும் நடாத்துவதறகுத் தேவையான வசதிகளை வழங்குதல்.
3. குறைந்த வசதிகளைக் கொண்ட பாடசாலைகள் மற்றும் கிராமிய மட்டத்திலுள்ள திறமையான விளையாட்டு வீர வீராங்கனைகளுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதன் ஊடாக அவர்களின் திறமைகளை மேம்படுத்திக் கொண்டு முன்னோக்கிச் செல்வதற்குத் தேவையான வசதிகளை வழங்குதல்.
4. தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான நீச்சல் போட்டிகளை நடாத்துவதற்குத் தேவையான நீச்சல் மற்றும் நீரில் மூழ்கும் தடாக வசதிகளை வழங்குதல்.
5. பரீட்சைகள், கருத்தரங்குகள் மாநாடுகள் மற்:றும் விழாக்கள், பொழுது போக்கு நடவடிக்கைகளுக்குத் தேவையான வசதிகளை வழங்குதல்.
6. பயிற்சிப் பட்டறைகளை ஏற்பாடு செய்தல்.

வசதிகள் மற்றும் சேவைகள் வழங்கும் துறைகள்

பகல் நேரத்தில் போன்றே இரவு நேரத்திலும் வசதிகளையும் சேவைகளையும் வழங்கக் கூடிய விசேட ஆற்றல் கொண்ட சுகததாஸ விளையாட்டுப் பல் கூட்டுத் தொகுதி அதிகார சபையானது விளையாட்டு, சுகாதாரம், கல்வி போன்றே மகிழ்ச்சியூட்டும் துறைகளுக்கும் வசதிகள் மற்றும் சேவைகளை வழங்குவதன் ஊடாக தேசிய ரீதியில் மிகவும் கூடிய பங்களிப்புச செய்கின்றது. விசேடமாக விளையாட்டுத் துறைக்கு சர்வதேச மட்டத்தில் சேவைகளையும் வசதிகளையும் வழங்கும் முதன்மையான நிறுவனம் சுகததாஸ விளையாட்டுப் பல் கூட்டுத் தொகுதி அதிகார சபையாகும்.

*விளையாட்டு*

சகல மெய்வல்லுனர் விளையாட்டுகள், றக்கர், கூடைப்பந்து, கால்பந்து, கைப்பந்து, கரப்பந்து, பெட்மின்டன், ஸ்கொட்ச், மேசைப்பந்து, மல் யுத்தம், ஜுடோ, வூசூ, குத்துச் சண்டை, டைகொண்டோ, கராட்டே, ஜிம்னாஸ்டிக், கிரிக்கெட் போன்ற விளையாட்டுகளுக்கு சர்வதேச மட்டத்திலான வசதிகள் வழங்குதல்.

தேசிய மற்றும் சர்வதேச விழாக்கள், வேலைப் பட்டறைகள், பயிற்சிப் பாடநெறிகள், நீச்சல் மற்றும் உயிர்ப் பாதுகாப்பு பாடநெறிகள், கண்காட்சிகள், கூட்டங்களுக்காக சர்வதேச மட்டத்திலான சேவைகளையும் வசதிகளையும் வழங்குதல்.

*மகிழ்ச்சியூட்டல்*

(1) தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் பாரிய அளவிலான களியாட்டங்களுக்கு சர்வதேச மட்டத்திலான சேவைகள் மற்றும் வசதிகளை வழங்குதல்.

(2) வியாபார பிரசாரம் மற்றும் அறிவித்தல்கள் விற்பனைக்குரிய அசையாத புகைப்படங்கள் எடுப்பதன் பொருட்டு மற்றும் வீடியோ நாடாக்களுக்காக தேவையான பின்னணி வசதிகள் பெற்றுக் கொடுப்பதன் ஊடாக சேவைகளையும் வசதிகளையும் வழங்குதல். மிகப் பிரசித்தமான வியாபார அறிவித்தல்கள் இந்த அதிகார சபை சார்ந்ததாக அண்மையில் படமெடுக்கப்பட்டுள்ளன என்பதனை குறிப்பிடப்படுதல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட சேவைகளையும் வசதிகளையும் வழங்குவதற்காக சுகததாஸ விளையாட்டு பல் கூட்டுத் தொகுதி அதிகார சபை கீழ்காணும் நிறுவனங்கைக் கொண்டதாகும்.

1 சுகததாஸ விளையாட்டரங்கு மற்றும் நீச்சல் / நீரில் மூழ்கும் தடாகம்.

2. சுகததாஸ விளையாட்டு உணவகம்.

3. *சுகததாஸ வெளிவாரி விளையாட்டரங்கு.*

4. ஆர். பிரேமதாஸ சர்வதேச கிரிக்கெட் விளையாட்டரங்கு
   (2006.11.01 ஆம் திகதி தொடக்கம் முப்பது வருட காலத்துக்கு இலங்கை கிரிக்கெட் நிறுவனத்துக்குக் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது.)

5. போகம்பர வெளிவாரி விளையாட்டரங்கு.

6. பெலிஅத்த மற்றும் வீரகெட்டிய நீச்சல் தடாகம்.

சுகததாச உள்ளக விளையாட்டரங்கு

சுகததாச உள்ளக விளையாட்டரங்கு பின்வருவனற்றை உட்கொண்டதாகும்.

1. உள்க விளையாட்டரங்கு
2. உப விளையாட்டரங்கு
3. நீச்சல் தடாகத் தொகுதி
4. உடல் வளர்ச்சி நிலையாம்
5. விளையாட்டு உணவகம்

உள்ளக விளையாட்டரங்கு



உள்ளக விளையாட்டரங்கு 5004 ஆசனங்களைக் கொண்டதாக அமைக்கப்பட்ட காற்றுச் சீராக்கி பொருத்தப்பட்ட பார்வையாளர் கூடமொன்றுடன் கூடியதாகவுள்ளதுடன்இங்கு உள்ளக விளையாட்டரங்கின் அகலம் 35 மீட்டர்களும் நீளம் 40 மீட்டர்களுமாகும். இந்த விளையாட்டரங்கில் கூடைப்பந்து, பெட்மின்டன் , வலைப்பந்து, ஜுடோ, ஜிம்நாஸ்டிக், கரப்பந்து, மேசைப் பந்து, குத்துச்சண்டை, கராட்டே, மல்யுத்தம், மற்றும் ஸ்கொட்ச் ஆகிய உள்ளக விளையாட்டுப் போட்டிகள் நடாத்துவதற்கு வசதிகள் அளிக்கப்படும்.

இதற்கு மேலதிகமாக பல்வேறு விழாக்கள், கருத்தரங்குகள் சங்கீத காட்சிகள், அரசாங்க விழாக்கள் மற்றும் பல்வேறு பயிற்சிப்பட்டறைகள் ஆகியவற்றுக்கான வசதிகளும் வழங்கப்படும்.



சுமதி ரெலி விருது வழங்கும் விழா



குத்துச் சண்டைப் போட்டியொன்று




ஆசாபோஸ்லே சங்கீத விழா

2011 ஆம் ஆண்டில் உள்ளக விளையாட்டரங்கில் நடாத்தப்பட்ட மொத்த போட்டிகள்/திறமைகள் மற்றும் ஏனைய விழாக்கள் பற்றிய பொழிப்பு கீழ்க் கண்டவாராகும்.

- ஜிம்னாஸ்டிக் - 04
- கரப்பந்து - 04
- குத்துச் சண்டை - 05
- கராட்டே - 11
- கூடைப்பந்து - 01
- சங்கீத விழாக்கள் - 07
- பரீட்சைகள் - 02
- விருது வழங்கும் விழாக்கள் - 03
- வலைப்பந்து - 02
- வூசு போட்டி - 01
- கருத்தரங்குகள் - 15
- வியாபார படப்பிடிப்புகள் - 01
- ஏனைய விழாக்கள் - 23

உப விளையாட்டரங்குகள்.







இந்த உப விளையாட்டரங்கு இரண்டு பெட்மின்டன் விளையாட்டுத் திடள்களையும் நான்கு ஸ்கொஷ் விளையாட்டுத் திடல்களையும் கொண்டதாக உள்ளதுடன் விளையாட்டுப் போட்டிகள் மற்றும் பயிற்சி நடவடிக்கைகளுக்காக வசதிகள் வழங்கப்பட்டதன் மூலம் ரூபா 962,251/= வருமானம் அதன் மூலம் பெறப்பட்டுள்ளது.

## நீச்சல் தடாகத்தெகுதி

நாட்டுக்குச் சொந்தமான சகல வசதிகளையும் கொண்ட நீச்சல் தடாகம் இந்த இந்த அதிகார சபைக்குச் சொந்தமாக இருப்பதுடன், அது 04 நீச்சல் தடாகங்களைக் கொண்டதாகும்.

- பிரதான நீச்சல் தடாகம் (50 மீட்டர்)
- மூழ்கும் தடாகம்.
- பயிற்சி பெறுவதற்கான துணைத் தடாகம்.
- சிறு குழந்தைகளுக்கான தடாகம்.

அந்த தடாகங்களிடையே பிரதான நீச்சல் தடாகத்திலும் மூழ்கும் தடாகத்திலும் நீர்க்கசிவு காரணமாக வருட ஆரம்பத்திலிருந்தே மூடப்பட்டிருந்ததுடன் , 2011 செப்டம்பர் 12 ஆம் திகதி செப்பனிடும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டது. இந்த செப்பனிடும் வேலைகள் 2012 ஜுலை 07 ஆம் திகதியன்று பூர்த்தி செய்யப்படவுள்ளது.



பிரதான நீச்சல் தடாகம்
( செப்பனிடும்வேலைகள் நடைபெறும்போது)



மூழ்கும் தடாகம்
(செப்பனிடும் வேலைகள் நடைபெறும்போது)



சிறு குழந்தைகளுக்கான தடாகம்



பயிற்சி பெறுவதற்கான துணைத் தடாகம்.

இந்த நீச்சல் தடாகங்களினூடாக பாடசாலை நீச்சல் போட்டிகள் நடாத்துதல் தொடக்கம் சர்வதேச மட்டத்திலான நீச்சல் போட்டிகள் நடாத்துதல் வரை தேவையான வசதிகள் வழங்கப்படுகின்றன. அதற்கான நவீன இலத்தரனியல் காலம் கணிக்கும் உபகரணங்கள் மூலம் காலத்தை குறிக்கும் வசதிகள் வழங்கப்பட்டுள்ளதுடன் பகல்/இரவு போட்டிகளுக்காக கூடிய சக்தி கொண்ட மின்சார வெளிச்சத் தூண்கள் கொண்ட வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக பாடசாலைச் சிறுவர்களுக்கு நீச்சல் பாடசாலையொன்றும் நடாத்தப் பட்டு வருவதுடன் இதன் ஊடாக மிகக் குறைந்த செலவில் நீச்சல் தடாக வசதிகள் இல்லாத சிறுவர்களுக்கு பாரிய சேவையொன்று நிறைவு செய்யப்படுகின்றது. பிரதான தடாகத்திலும் மூழ்கும் தடாகத்திலும் நீர்க்கசிவு காரணமாக மற்றும் செப்பனிடும வேலைகள் காரணமாக நீச்சல் போட்டிகள் நடாத்தப்படவில்லை என்பதுடன் சிறுவர் நீச்சல் தடாகம் மற்றும் பயிற்சித் தடாகத்துக்கான துணைத் தடாகம் மட்டும் பயன்படுத்தப்பட்டது. இந்த வருடத்தில் அதன் மூலம் ரூபா.2,376,336/= உழைக்கப்பட்டுள்ளது.

உடல் வளர்ச்சி மத்திய நிலையம்

சகல உபகரணங்களையும் கொண்ட உடல் வளர்ச்சி மத்திய நிலையமொன்று இருப்பதுடன் இங்கு அங்கத்துவம் பெற்றுத் தேவையான வசதிகளைப் பெற்றுக் கொள்ள இயலும். மேலும் இந்த மத்திய நிலையத்தின் நவீனமயப்படுத்தல் 2012 டிசம்பர் 06 ஆம் திகதியன்று ஆரம்பிக்கப்பட்டுள்ள்துடன்2012 மார்ச் 20 ஆம் திகதி நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படவுள்ளது. அதே போன்று நவீன உடல் வளர்ச்சி உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கும் எதிர் வரும் வருடங்களில் நடவடிக்கை எடுக்கப்படும். 2011 ஆம் ஆண்டில் உடல் வளர்ச்சி மத்திய நிலையத்திலிருந்து ரூபா. 1,054,986/= வருமானம் உழைக்கப் பட்டுள்ளது.





## விளையாட்டு உணவகம்

இந்த விளயாட்டு உணவகம் கீழ்க்காணும் அங்கங்களைக் கொண்டதாகும்.

- தனியான அறை 06
- இரட்டை அறை 14
- காற்றுச் சீராக்கிய இரட்டை அறைகள் 04
- கூட்டு அறைகள் 18
- கூட்டமண்டபம் 02

சுகததாஸ விளையாட்டு பல் கூட்டுத் தொகுதி ஆரம்பிக்கப்ட்டகாலப் பகுதி தொடக்கம் நடாத்தப் பட்டுவரும் அந்த விளையாட்டு உணவகம் 42 அறைகளையும் ஏறத்தாள 100 பேர்கள் கூடக்கூடிய அறை வசதிகளும் விளையாட்டு வீரர்களுக்கு தங்கக் கூடிய கூட்டு அறை வசதிகளும் கொண்டதாகும். இந்த உணவகம் அறை வசதிகள் வழங்குவதற்கு மேலதிகமாக கலியான வைபவங்கள், கூட்டங்கள், மற்றும் வேலைப் பட்டறைகளுக்கும் தேவையான வசதிகள் வழங்கப்படும். விளையாட்டு வீர, வீராங்கனைகளின் நலனோம்புகைக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு அவர்களுக்கும் தேசிய சங்கங்களுக்கும் சலுகை அடிப்படையில்இந்த உணவகத்தில் வசதிகள் பெற்றுக் கொடுக்கப்படும். விளையாட்டரங்கின் தேவைப்பாடுகளுக்கு தடைகள் ஏற்படாமல் இட வசதி உள்ள சந்தர்ப்பங்களில் பொது மக்களுக்கும் வசதிகள் வழங்கப்படும். மேலும் இந்த வருடத்தில் உணவு பானங்கள் வழங்குதல் செய்யப்பட இல்லையாதலால் சமையலறை பாவிக்கப்படவில்லை. தற்போது இங்கு தங்குமிட வசதிகள் மட்டும் பெற்றுக் கொடுக்கப்படுகின்றது.



2011 ஆம்ஆண்டில் உள்ளக விளையாட்டரங்கிற்குரிய உள்ளக விளையாட்டரங்கினால், நீச்சல் தடாகத்தினால், சரீர வளர்ச்சி மத்திய நிலையத்தினால் மற்றும் விளையாட்டு உணவகத்தினால் 45,913,022/= ரூபா வருமானமாகப் பெறப்பட்டுள்ளது.

## சுகததாச வெளிவாரி விளையாட்டரங்கு



400 மீட்டர் செயற்கை ஓடுபாதை மற்றும் விளையாட்டரங்கு



200 மீட்டர் செயற்கை ஓடுபாதை

இந்த விளையாட்டரங்கு ஓட்டப்பாதை மற்றும் அரங்கு விளையாட்டுப் போட்டிகள் ககல இரவு இரண்டிலும் நடாத்தக் கூடிய விதத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த விளையாட்டரங்கில் ஒரே முறையில் சுமார் 30,000 பார்வையாளர்களுக்கு போட்டிகளைப் பார்வையிடக் கூடியவாறு விளையாட்டரங்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளது. விளையாட்டரங்கில் 400 மீட்டர் செயற்கை ஓடுபாதை ஒன்றும் மற்றும் 200 மீட்டர் செயற்கை ஓடுபாதை ஒன்றும் உள்ளன. சர்வதேச மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளுக்கு த்தேவையான இலத்திரனியல் காலக்கணக்கெடுப்பு இயந்திர வசதிகளும் வழங்கப்படும். இதற்கு மேலதிகமாக மூன்று மாடிகளைக் கொண்ட ஊடகக் குடிலொன்று, அதிக சக்தி வாய்ந்த மின்சார வெளிச்ச அமைப்பின்ஊடாக இரவு விளையாட்டுப் போட்டிகள் நடாத்துவதன் பொருட்டு தேவையான வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த விளையாட்டரங்கில் மெய்வல்லுனர் விளையாட்டு,கரப்பந்து, கூடைப்பந்து, றக்கர், காற்பந்து விளையாட்டுகள் போன்றே பல்வேறு விழாக்களுக்கும் வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

இந்த விளையாட்டரங்கின் செப்பனிடும் நடவடிக்கைகளுக்காக 2011 செப்டம்பர் மாதம் தொடக்கம் காற்பந்து மைதானம் 2011 டிசம்பர் மாதம் தொடக்கம் 400 மீட்டர் செயற்கை ஓடுபாதையும் மீண்டும் விரிப்பதற்காக மூடி வைக்கப்பட்டுள்ளது. 2012 ஏப்பரல் 20ம் திகதி ஆகும் போது 400 மீட்டர் செயற்கை ஓடுபாதையும் 2012 ஜீலை 19ம் திகதி ஆகும் போது காற்பந்து மைதானமும் வேலைகள் பூர்த்தி செய்யப்பட உள்ளன.



நவீனமயப்படுத்தப்பட்டுவரும் 400 மீட்டர் செயற்கை ஒடுபாதையும் விளையாட்டரங்கும்

2011 ஆம் ஆண்டில் இந்த விளயாட்டரங்கில்நடாத்தப்பட்ட போட்டிகள் மற்றும் விழாக்கள் பற்றிய தகவல்கள் கீழ்கண்வாறாகும்.

- காற்பந்து போட்டி - 20
- விளையாட்டுப் போட்டிகள் - 80
  (பாடசாலை விடுதிகளுக்கிடையிலான போட்டி)
- மெய்வல்லுனர் விளையாட்டுப்போட்டிகள் - 28
- றக்கர் போட்டிகள் - 16
- வியாபார படப்பிடிப்பு மற்றும் வியாபார கூடங்கள் - 09
- எனைய விளையாட்டுப் போட்டிகள - 01
- எனைய விழா - 02
- விளையாட்டுப் பயிற்சி - 430

இந்த விளையாட்டரங்கின் மூலம் 2011ம் ஆண்டில் ரூபா 15,894,462/= வருமானம் உழைக்கப்பட்டுள்ளது.

ஆர். பிரேமதாஸ கிரிக்கெட் விளையாட்டரங்கு.



ஆர். பிரேமதாஸ கிரிக்கெட் விளையாட்டரங்கு எமது நாட்டுக்குரிய தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான போட்டிகளை நடாத்துவதறகுத் தேவையான சகல வசதிகளையும்கொண்ட ஓர் விளையாட்டரங்காகும் .ங்கு ஒரே முறையில் சுமார் 35,000 பார்வையாளர்களுக:கு போட்டிகளை பாாப்பதற்கான வசதிகள் உள்ளதுடன் பாரிய வாகனத் தரிப்பிடத்தையும் கொர்ண்டதாகும். இந்த விளையாட்டரங்கு 2006.05.10 ஆம் திகதியன்று எடுக்கப்ட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் 2006.11.01 ஆம் திகதி தொடக்கம் 30 (முப்பது) வருட காலப் பகுதிக்கு இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்கு மாதமொன்றுக்கு ரூபா 250,000/= க்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இந்த விளையாட்டரங்கின் மூலம் ரூபா 3,000,000/= வருமானம் உழைக்கப்பட்டுள்ளது.

சுகததாஸ தேசிய விளையாட்டு பல் கூட்டுத் தொகுதி அதிகார சபையின் பிரதானமான வருமானமாக உள்ள இந்த விளையாட்டரங்கு நீண்டகாலமாக மாதாந்த மாற்றமடையாத குத்தகை வாடகையொன்றுடன் குத்தகைக்கு வழங்குதல் இந்த அதிகார சபையின் வருமானம் வீழ்ச்சியடைவதற்குக் காரணமாக அமைந்துள்ளது.

போகம்பர வெளிவாரி விளையாட்டரங்கு





இந்த விளையாட்டரங்கு கண்டி நகர சபையினால் நிருவகிக்கப்பட்டதுடன் 1999 ஆம் ஆண்டு தொடக்கம் எமது அதிகார சபையினால் நிருவகிக்கப்படுகின்றது. இந்த வெளிவாரி விளையாட்டரங்கில் ஒரே முறையில் சுமார் 10,000 பார்வையாளர்களுக்கு போட்டிகளைப் பாாப்பதற்கான வசதிகள் உள்ளது. இங்கு மெய்வல்லுனர் விளையாட்டு, காற்பந்து, றக்கர், கூடைப்பந்து, பாடசாலை விளையாட்டு வைபவங்கள் மற்றும் ஏனைய வைபவங்களுக்கான வசதிகள் உள்ளன.

இந்த ஆண்டில் விளையர்டரங்கின. மின்சார மின்சுற்று அமைப்பை மீண்டும் ஏற்படுத்துவதன் பொருட்டு மற்றும் சக்தி விருத்தி மண்டபமொன்று புதிதாக நிர்மாணிப்பதற்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.இந்த விளையாட்டரங்கிள் மூலம் 2011 அமு் அணுடீலு் ரூபுர் 2,553,687/= வருமானம் உழைக்கப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டில் இந்த விளையாட்டரங்கில் நடாத்தப்பட்ட போட்டிகள் மற்றும் விழாக்கள் பற்றிய அறிக்கை கீழ்க் கண்டவாறாகும்.

- மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டிகள் - 52
- கால்பந்து போட்டிகள் - 52
- றக்கர் போட்டிகள் - 33
- வியாபாரப் படப் பிடிப்பு - 01
- வளையாட்டுப்பயிற்சிகள் - 365

பெலியத்த மற்றும் வீரக்கெட்டிய நீச்சல் தடாகங்கள்





பெலியத்த தொழில்நுட்பக் கல்லூரியிலும் வீரகெட்டிய மத்திய கல்லூரியிலும் உள்ள நீச்சல் தடாகங்களின் பராமரிப்பு மற்றும் நிருவாக நடவடிக்கைகள் மட்டும் எமது அதிகார சபையினால் நடாத்தப்பட்டு வருகின்றன.

பெலியத்த தடாகத்திற்கு அண்மையுள்ள பெரியவர்கள், கல்லூரி மாணவ ,மாணவிகள் பயிற்சி அடைகினறனா். தடாகததில ் 2011ஆண்டு மூலம் ரூபா 129.022/= வருமானம் உழைக்கப்பட்டுள்ளது.

துடாகத்திள் பயிற்சியா்ளர்கள் விதம் மிகவும் குறைவு கராணமாக .இலவச மூன்று நாள் பயிற்சி கருத்தராங்கு வழங்கினர். பின்பு பயிற்சியா்ளர்கள் விதம் மிகவும் அதிகாரித்தது.

- பெலியத்த
    - I 08 வழித் தடங்கள் கொண்ட 50 மீட்டர் நீச்சல் தடாகம்.
    - II நீரில் மூழ்கும் தடாகம்.

- வீரகெட்டிய
    - I 08 வழித் தடங்கள் கொண்ட 50 மீட்டர் நீச்சல் தடாகம்.

நுவரெலிய குதிரைப் பந்தயத் திடல்






இந்த குதிரைப் பந்தயத் திடலின் பொறுப்பு 2011.07.05 தொடக்கம் விளையாட்டு அமைச்சினால் பொறுப்பேற்கப்பட்டுள்ளதுடன், 2011 ஒக்டோபர் மாதம் தொடக்கம் இந்த குதிரைப் பந்தயத் திடலின் முகாமைத்துவம் எமது அதிகார சபையினால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது. இதன் நிலப்பரப்பு 34,564 ஹெக்டயார்கள் ஆகும்.

2011 ஒக்டோபர் மாதம் தொடக்கம் இந்த விளையாட்டடுத் திடலின் குதிரைச் சாவடிகளுக்காக மாதம் ஒன்றுக்கு ரூபா 100 வீதம் அறவீடொன்று செய்யப்பட்டது. அதன் மூலம் பெறப்பட்ட வருமானம் ரூபா 29,937/= ஆகும்.





2012 ஆம் ஆண்டிற்காக இந்த விளையாட்டரங்கில் பலவேறு வருமான மூலங்கள் பிரேரிக்கப் பட்டுள்ளதுடன், நிலையான நிர்மாணிப்பு மற்றும் ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகள் பிரேரிக்கப் பட்டுள்ளன.

## நிறுவனத்தின் மொத்த முன்னேற்றம்

2011 ஆம் ஆண்டில் அதிகார சபையின் மூலதனச் செலவினம் மூபா 109,652,467/= ஆக இருந்ததுடன், தேய்மானம் மற்றும் பணிக் கொடை ஒதுக்கலுடன் செயற்பாட்டுச் செலவினம் ரூபா 219,697,370/= ஆகும். இவற்றுள் ரூபா 85,929,782/= கொண்ட தொகை நிலையான சொத்துக்களுக்கான தேய்மான ஒதுக்கீடாகும்.
2011 ஆம் ஆண்டில் அதிகார சபை பொதுத் திறைசேரியிலிருந்து மூலதன ஒதுக்கீடாக ரூபா 291,189,602/= ம் மற்றும் மீண்டு வரும் செலவின ஒதுக்கீடாக ரூபா 74,600,00/= கொண்ட தொகையைப் பெற்றுக் கொண்டுள்ளது. கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது பெற்றுக் கொள்ளப்பட்ட மீண்டு வரும் செலவின ஒதுக்கீடு ரூபா 4,900,000/= இனால் அதிகரித்துள்ளது.

2011 ஆம் ஆண்டில் அதிகார சபையினால் உழைக்கப்பட்ட வருமானம் ரூபா 69,006,960/= ஆக இருந்ததுடன் அது 2010 ஆம் ஆண்டை விடவும் ரூபா 7,397,134/= அதிகரிப்பாகும். 2010 ஆம் ஆண்டில் செலவினம் 2009 ஆம் ஆண்டை விடவும் அதிகரிப்பதற்கு தேய்மா ஒதுக்கீடாக ரூபா 25,144,988/= இனால் அதிகரித்தமை பிரதானமாகத் தாக்கம் செலுத்தியுள்ளது.

2011 ஆம் ஆண்டில் நிறுவனத்தினால் உழைக்கப்பட்ட வருமானம் ரூபா 69,006,960/= ஆக இருந்ததுடன் தேய்மான ஒதுக்கீட்டுடன் மொத்தச் செலவினம் (நிதிச் செலவினம் உட்பட்டதாக) ரூபா 219,945,446/= ஆக இருந்தது.

2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம்ஆண்டு வரை நிறுவனத்தினால் உழைக்கப்பட்ட வருமானம் கீழ் கண்டவாறு நகர்த்தப்பட்டுள்ளன.

| வருடம் | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் ரூபா மில்லியன் | 53.32 | 67.32 | 60.65 | 54.78 | 57.85 | 61.60 | 69.00 |




<u>நிறுவனத்தின் மொத்தக் கடன்</u>

2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரையில் இருந்த கடன் நிலைமை கீழ்க்காணும் விதத்தில் கூடிக் குறைந்துள்ளன.

| வருடம் | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் ரூபா மில்லியன் | 0.80 | 0.10 | 1.50 | 2.30 | 4.61 | 133.03 | 42.95 |

## கணக்கீட்டுக் கொள்கைகள்

### 01. பொது

#### 1.1 இயைபாகும் கூற்று.

சுகததாஸ தேசிய விளையாட்டு பல்தொகுதி அதிகார சபையின் கணக்குகள் இலங்கை பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவகத்தினால் வெளியிடப்பட்ட கணக்கீட்டு தரங்களுக்கு அமைவாக தயாரிக்கப்ட்டுள்ளது.

#### 1.2 தயாரித்தல் அமைப்பு

நிதிக் கூற்றுக்கல் வரலாற்று ரீதியிலான செலவினங்கள் மீது தயாரிக்கப்பட்டுள்ளதுடன் காணி, கட்டிடங்கள் மற்றும் இயந்திராதிகள் கணக்கீடு செய்வதற்கான சீராக்கல்கள் கணக்குகளில் காண்பிக்கப்பட்டுள்ளன. இங்கு பணவீக்க நிலைமைகள் கவனத்திற் கொள்ளப்படவில்லை.

#### 1.3 ஐந்தொகைத் திகதிக்குப் பின் நிகழ்வுகள்

ஐந்தொகைத் திகதிக்குப் பின்னர் நடைபெறும் சகல பிரமான ரீதியான தாக்கங்கள் இருப்பின் அவற்றக்காக நிதிக் கூற்றுக்களில் தேவையான சீராக்கல்கள் செய்யப்பட்டுள்ளதுடன் அந்த சீராக்கல்கள் கணக்ககளில் காண்பிக்கப்பட்டுள்ளன.

### 02. சொத்துக்கள் மற்றும் அவற்றை மதிப்பீடு செய்யும் முறைமையும்

ஐந்தொகையில் காண்பிக்கப்பட்டுள்ள சொத்துதுக்களின் நடைமுறை சொத்துக்களாக நிதி மற்றும் வங்கி மீதி மற்றும் பொதுவான கொடுக்கல் வாங்கல்கள் செயற்பாடுகளில் ஒரு வருடத்துள் பணமாக மாற்றம் செய்யக் கூடியதென கவனத்திற் கொள்ளப்படும் விடயங்கள் இனங்காணப்பட்ள்ளன.

#### 2.1. சொத்துக்கள்

ஆதனம், பொறித் தெகுதி மற்றும் இயந்திர உபகரணங்கள் ஆகிய சொத்துக்களின் பெறுமதி சேர்ந்த தேய்மானங்கள் கழிக்கப்ட்ட பின்னரான பெறுமதியே காண்பிக்ப்பட்டுள்ளன.

கட்டிட சொத்துக்களில் அடங்கியுள்ள செலவினங்களாவன பொருட்கள் மற்றும் நேரடியான சிரம செலவினங்களாகும். அவ்வாறே நிலையான சொத்துக்கள் பிரதான துணைப்பிரிவுகளுக்கு வேறாக்கப்பட்டுள்ளதானது அவற்றின் பயன்படுத்தப்படும் காலத்தை கவனத்திற்கொண்டாகும்.

ஆர். பிரேமதாஸ சர்வதேச கிரிக்கட் விளையாட்டரங்கு

ஆர். பிரேமதாஸ சர்வதேச கிரிக்கட் விளையாட்டரங்கு 2006.11.01ம் திகதி தொடக்கம் இலங்கை கிரிக்கட் நிறுவனத்தினால் மாதம் ஒன்றுக்கு ரூபா 250,000.00 அறவிடும் அமைப்பின் மீது 30 வருட காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. 2006.12.31ம் திகதியாகும் போது இலங்கைக் கிரிக்கட் நிறுனத்தின் மூலம் நிர்மானிக்கப்பட்ட கட்டிடங்களுக்கு சுகததாச தேசிய விளையாட்டு பல்தொகுதி அதிகார சபைக்கு ரூபா 25,023,264/= தொகை அறவிடப்பட வேண்டியுள்ளதுடன் அது பற்றியும் தற்போது அறவிடப்படும் மாதாந்த வாடகை பற்றியும் இரு தரப்பினருக்கிடையே இணக்கப்பாடொன்றுக்கு வருவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

பெலியத்த மற்றும் வீரகெடிய நீச்சல் தடாக தொகுதி

பெலியத்த தொழிநுட்பக் கல்லூரிக்கும் வீரகெடிய ராஜபக்ஷ மத்திய மகா வித்தியாலயத்திற்கும் உரித்துடையதாக இருந்த இரண்டு நீச்சல் தடாகங்களும் மற்றும் நீரில் மூழ்கும் தடாகமும் 2008ம் ஆண்டு தொடக்கம் சுகததாச தேசிய பல்தொகுதி அதிகார சபையினால் பராமரிப்பு வேலைகள் செய்யப்படுகின்றன. அதிகார சபையின் முகாமைத்துவ அங்கீகாரத்தின் மீது ஒன்பது (09) ஊழியர்கள் தற்காலிக அடிப்படையில் சேர்ததுக் கொள்ளப்பட்டுள்ளனர். அவர்களுள் மூன்று பேர் ஒப்பந்த அடிப்படையில் ஆகும்.

2008ம் ஆண்டில் இந்த நீச்சல் தடாகங்களின் செலவினம் உள்ளக விளையாட்டரங்கின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் முகாமைத்துவ சபை தீர்மானத்தின் பிரகாரம் 2009ம் ஆண்டு தொடக்கம் இந்த நீச்சல் தடாகங்களின் செலவினம் வேறாக கணக்குகளின் காண்பிக்கப்பட்டுள்ளன.

நுவரெலிய குதிரைப் பந்தயத் திடல்

இந்த குதிரைப் பந்தயத் திடலின் பொறுப்பு 2011.07.05ஆம் திகதி தொடக்கம் விளையாட்டு அமைச்சினால் பொறுப்பேற்கப்பட்டுள்ளதுடன், 2011 ஒக்டோபர் மாதம் 23ஆம் திகதி தொடக்கம் குதிரைப் பந்தயத் திடலின் முகாமைத்துவம் எமது அதிகார சபைக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

2.2 ஏனைய செலவினங்கள்

ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களில் அடங்கியுள்ள பகுதிகள் மீண்டும் தாபிப்பதற்காக செய்யப்பட்ட செலவினம் வேறாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் அவை மூலதனமாக்கப்பட்டு பிரயோசனமுள்ள ஆயுட்காலத்தில் பதிவழிப்பதற்கு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஏனைய செலவினங்கள் அந்த மூலதனமாக்கப்பட்டு அந்தச் செலவினங்களின் மூலம் சொத்துக்களின் எதிர்கால பொருளாதார பயன்களில் வளர்ச்சி ஒன்று ஏற்படும் செலவினங்களாக உள்ளதுடன் ஏனைய சகல செலவினங்களும் வருமானக் கூற்றுக்கு சீராக்கம் செய்யப்பட்டுள்ளது.

2.3 தேய்மானம்

தேய்மானக் கொள்கையாக பொதுவான வழிகாட்டல் முறை பின்பற்றப்படுகிறது என்பதுடன் சொத்துக்களின் தேய்மானம் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட வருடத்தில் அல்லது நிர்மானிப்புகள் பூர்த்தி செய்யப்பட்ட ஆண்டு தொடக்கம் செய்யப்படுகின்றது. தேய்மானம் எதிர்பார்க்கப்பட்ட ஆயுட்காலத்துள் வருமான செலவின கணக்கிற்கு எழுதப்பட்டுள்ளது. காணிகளுக்கு தேய்மானம் செய்யப்படவில்லை.

- கட்டிடங்களும் நிர்மானிப்புகளும் 2.5%
- அதி சக்கதிவாய்ந்த மின்சார தூண்கள் 10%
- செயற்கை ஓடுபாதை 20%
- இயந்திரங்களும் உபகரணங்களும் 10%
- கணனிகள் 25%
- மோட்டார் வாகனம் 20%
- விளையாட்டு உபகரணங்கள் 10%
- மரத் தளபாடங்களும் உபகரணங்களும் 10%
- அலுவலக உபகரணங்கள் 10%
- திரைச் சீலை 50%
- அதி சக்திவாந்த மின் குமிழ்களும் இக்னைடர்களும் 50%

35-5811 இலக்கம் கொண்ட பஜிரோ வாகனம் மனித சக்தி மற்றும் செயற்பாடுகள் அமைச்சின் கீழ் பதிவுசெய்யப்பட்டிருப்பதனால் எமது அதிகார சபையின் சொத்தாக கவனத்திற்கொள்ள முடியாது. அதற்குரிய பராமரிப்பு மற்றும் ஏனைய செலவினங்கள் அதிகார சபையின் வருமான செலவின கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ளது.

64-3180 இலக்கம் கொண்ட பஜிரோ வாகனம் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் கீழ் பதிவுசெய்யப்பட்டிருப்பதனால் எமது அதிகார சபையின் சொத்தாக கருத முடியாதுள்ளது. அதற்குரிய பராமரிப்பு மற்றும் ஏனைய செலவினங்கள் அதிகார சபையின் வருமான செலவினக் கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ளது.

தேசிய வரவு செலவு சுற்றறிக்கை இல. 150 இன் பிரகாரம் பொதுத் திறைசேரியில் இருந்து ரூபா 9,100,000 பெறுமதியான இல. NB-1527 புதிய வான் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. வாகனத்தின் பெறுமதியாக காப்புறுதிப் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.4 வியாபார மற்றும் ஏனைய கடன் பெறல்

வியாபார மற்றும் ஏனைய கடன் பெறல் நிதிக் கூற்றுகளில் அவற்றின் நிகர தேர்ந்த பெறுமதி மீது காண்பிக்கப்பட்டுள்ளது.

2.5 தொகை

தொகை நிதிக்கூற்றுகளில் செலவினமாக காண்பிக்கப்படுகிறது. தொகைப் பெறுமதிகளின் முதல் பெறுகை முதல் வழங்கள் முறை மீது தீர்மானிக்கப்படுவதுடன் அதற்கு கொள்வனவு செய்யும் செலவினம் மற்றும் தொகையின் தற்போதைய நிலைமை மற்றும் உரித்துடைய இடத்திற்கு கொண்டுவரும் வரை உறப்பட்ட சகல செலவினங்களும் உரித்துடையதாகும்.

## 03. ஒதுக்கல் மற்றும் பொறுப்புகள்

நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்படும் போது இனங்காணப்பட்ட சகல பொறுப்புகளும் கணக்கீடு செய்யப்பட்டடுள்ளது. நிதிக்கூற்றுக்களில் நடைமுறைப் பொறுப்புகளாக இனங்காணப்பட்டுள்ளதாவது ஐந்தொகைத் திகதி தொடக்கம் ஒரு வருட காலத்துள் செலுத்தி முடிக்கப்பட வேண்டிய அல்லது கேட்கப்படும் போது செலுத்தப்பட வேண்டிய பொறுப்புகளாகும். நடைமுறை அல்லாத பொறுப்புகள் என்பது, ஒரு வருடத்தை விட கூடுதாலன காலப் பகுதியில் செலுத்தி முடிக்கப்பட வேண்டிய பொறுப்புகளாகும்.

3.1 ஊழியர் உரிமைகள்

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு செய்யப்பட்ட பங்களிப்புகள் நிதிக்கூற்றுகளில் செலவினங்களாக இனங்காணப்பட்டுள்ளது.

3.2 வியாபாரம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்

வியாபாரம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் அவற்றின் செலவினம் மீது நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்பட்டுள்ளது.

3.3 ஊழியர் ஓய்வூதியப் பணிக்கொடை

பணிக்கொடைக்காக நிதிக்கூற்றுகளில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன் முதல் சேவை ஆண்டு தொடக்க்ம் சகல ஊழியர்களும் இந்த ஏற்பாடுகளுக்கு கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளன. இது இலங்கை கணக்கீட்டு கொள்கை இலக்கம் 16க்கு இயைபானதாக செய்யப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இந்தக் கொடுப்பனவுகள் 1983ம் ஆண்டின் 12ம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவுகள் சட்டத்தின் பிரகாரம் உரிமைபெற்று தொடர்ச்சியாக ஐந்து ஆண்டுகள் சேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ள ஊழியர்களுக்கு மட்டும் செலுத்தப்படும்.

## 04. வருமானக் கூற்றுக்கள்

### 4.1 வருமானம்

இலங்கை கனக்கீட்டுக் கொள்கைகளின் பிரகாரம் உரித்துடைய சேவைகள் வழங்கியதன் பின்னர் சேர்ந்த அடிப்டையில் வருமானம் இனங் காணப்பட்டுள்ளன.

### 4.2 செலவினம்

வருமான விவரங்களில் இலாபம் அல்லது நட்டமானது வரிக்கு முந்திய மற்றும் சகல இனங்காணப்பட்ட பொறுப்புகளுக்கான எற்பாடுகள் ஒதுக்கப்பட்டதன் பின்னரே கண்டறியப்பட்டுள்ளன.

மொத்த மீதி கணக்கீடு செய்யப்படும் போது சொத்துக்கள் பராமரிப்பு மற்றும் வியாபாரத்தை நடாத்துவதற்காக செய்யப்பட்ட செலவினங்கள் வருமான விபரங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளன.

நிறுவனத்தின் வசதிகள் வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களிடமிருந்து தொலைபேசி, மின்சாரப் பட்டியல்கள், மற்றும் வாடகை அறவிடப்படும் என்பதுடன் உரித்துடைய செலவின வரிசைக்குள் காண்பிக்கப்ட்டுள்ளன.

### 4.3 நிதிச்செலவினம்

நிலையான வைப்புகளின் வட்டி வருமானம் தேறிய முறையில் கணக்கீடு செய்ய்ப்பட்டுள்ளது. வட்டிச் செலவினம் மற்றும் ஏனைய கடன் செலவினம், நிதிச் செலவினம் கணக்கிடப்படும் போது சீராக்கம் செய்யப்பட்டுள்ளன.

### 4.4 கொடுப்பனவுகள்.

மானியம் மற்றும் உதவிகள் அதற்குரிய செலவினங்களுக்கு ஒப்பாகும் விதத்தில் சீராக்கப்பட்டுள்ளன. சொத்துக்களுக்கு உரிய நிதி அல்லாத மானியங்கள் அதன் நிதி பெறுமதிக்கு கணக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் அந்த சொத்துக்கள் பயனுள்ள ஆயுட்காலத்ததுள் வருமானக் கூற்றுக்கு பதிவழிக்கப்படும்.

## 05. காசுப் பாய்ச்சல் கூற்று

### 5.1 நிதி

நிதி என இனங்காணப்பட்டுள்ளதானது கையில் மீதமுள்ள காசு மற்றும் மிக உயர் திரவ சீலம் கொண்ட காசாக பரிமாற்றம் செய்யக்கூடிய அவாவாறு பரிமாற்றம் செய்யப்படும் போது எவ்வித பாதிப்பும் இல்லாத சொத்துக்களாகும். இதற்கு காசுப் பாய்ச்சல் கூற்றில் காசு என்பது கையிலுள்ள காசு அல்லது வங்கிக் காசாகும். காசுப் பாய்ச்சல் கூற்று மறைமுகமான அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

## 06. ஐந்தொகைக்குப் பின்னரான நிகழ்வுகள்

ஐந்தொகை திகதிக்குப் பின்னர் அளவீடுள்ள சகல செலவினங்களும் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளதுடன் தேவையான சீராக்கங்கள் கணக்குகள் மூலம் வெளியாக்கப்பட்டுள்ளன.

சுகததாச தேசிய விளையாட்டு பல்தொகுதி அதிகார சபை

- வருமான செலவினக் கூற்று
- ஐந்தொகை
- காசுப் பாய்ச்சல் கூற்று

# 2011

# வருமான செலவினக் கூற்று

| 2011 டிசம்பர் 31ம் திகதியன்று முடிவடையும் ஆண்டிற்கான வருமான செலவினக் கூற்று | | |
|---|---|---|
| | | |
| | **31-12-2011** | **31-12-2010** |
| வருமானம் | 69,268,569 | 61,609,826 |
| | **69,268,569** | **61,609,826** |
| | | |
| அரசாங்க திறைசேரி ஒதுக்கீடு | 74,600,000 | 69,700,000 |
| | | - |
| | **74,600,000** | **69,700,000** |
| | | |
| மொத்த வருமானம் | **143,868,569** | **131,309,826** |
| கழிக்க | | |
| செயற்பாட்டு செலவினம் | | |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | (82,853,600) | (77,807,145) |
| முகாமைத்துவ சபையின் கொடுப்பனவுகள்/செலவின | (305,600) | (83,000) |
| பணிக்கொடை ஒதுக்கீடு | (4,622,033) | (3,006,358) |
| தேய்மானம் | (83,935,354) | (86,299,992) |
| ஏனைய செலவினம் | (46,192,162) | (46,716,850) |
| | **(217,908,750)** | **(213,913,346)** |
| | | |
| செயற்பாடடு இலாபம் / நட்டம் | (74,040,180) | (82,603,520) |
| மேலதிக பணிக்கொடை ஒதுக்கீடு | | - |
| நிதி செலவினம் | (177,912) | (1,365,985) |
| வரிக்கு முந்திய இலாபம் / நட்டம் | **(74,218,093)** | **(83,969,505)** |
| | | |
| சேர்க்க: செயற்பாடு அல்லாத வருமானம் | | |
| சேர்க்க: நிலையான வைப்பு வட்டி வருமானம் | 719,628 | 646,369 |
| | **(73,498,464)** | **(83,323,136)** |
| வரிக்கு முந்திய நிகர இலாபம் | | |
| | | |
| வருமான வரி | (70,164) | (63,097) |
| வருமான வரிக்குப் பிநதிய நிகர இலாபம் | **(73,568,628)** | **(83,386,233)** |
| | | |

**Approved for and on behalf of the Board of Management of**
**Sugathadasa National Sports Complex Authority**

D. C. W. AMARASEKARA
MANAGER (ACCOUNTS)
Sugathadasa National Sports Complex Authority
**Manager - Accounts**

Brig. Priyantha Samaratunga (Rtd)
RSP. USP. ato. DPMM, MISMM.
**Chairman**
Chairman
Sugathadasa National Sports Complex Authority
**Date : 14th August 2012**

LT COL L H MAHINDA RAJAPAKSHA RSP
DIRECTOR
Sugathadasa National Sports Complex Authority
Director
01

| 2011 டிசம்பர் 31ம் திகதியன்று ஐந்தொகை | | |
|---|---|---|
| | **31-12-2011** | **31-12-2010** |
| நிலையான சொத்துக்கள் | | |
| நடைமுறை அல்லாத சொத்துக்கள் | | |
| காணி | 2,856,612,140 | 2,856,612,140 |
| கட்டிடங்கள் | 1,093,331,754 | 1,112,331,050 |
| செயற்கை ஓடபாதை | - | 2,791,340 |
| அதிசக்தியுள்ள மின்சாரத் தூண்கள் | 4,918,748 | 6,490,944 |
| அதிசக்தியுள்ள மினகுமிழ்கள் | 641,748 | 1217160 |
| இயந்திரங்கள், உபகரணங்கள் | 188,750,555 | 218,181,425 |
| கணனிகள் | 44,376 | 354,536 |
| மோட்டார் வாகனம் | 11,163,872 | 5,178,496 |
| விளையாட்டு உபகரணங்கள் | 20,427,422 | 16,552,391 |
| மரத்தளபாடம், உபகரணங்கள் | 1,205,545 | 1,918,902 |
| அலுவலக மற்றும் ஏனைய உபகரணஙகள் | 8,894,310 | 7,046,813 |
| திரைச் சீலை | 2 | 500,482 |
| செய்யப்பட்டு வரும் வேலைகள் | 105,986,118 | 0 |
| | **4,291,976,590** | **4,229,175,680** |
| நீண்டகாலச் சொத்துகள் | | |
| நிலையான வைப்புக்கள் | 9,559,083 | 19,520,462 |
| | **9,559,083** | **19,520,462** |
| நடைமுறைச் சொத்துக்கள் | | |
| தொகை | 10,964,343 | 10,478,415 |
| முற்பணம் மற்றும் ஏனைய கிடைக்க வேண்டிய மீதி | 5,930,147 | 7,875,363 |
| பதவியணியினருக்கு வழங்கிய கடன் | 17,174,410 | 12,836,541 |
| கடன்காரர்கள் | 42,959,310 | 43,736,670 |
| நிதி மற்றும் வங்கி மீதி | 58,683,222 | 3,096,025 |
| | **135,711,432** | **78,023,015** |
| | | |
| மொத்த சொத்துகள் | **4,437,247,105** | **4,326,719,158** |
| | | |
| மூலதன உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள் | | |
| அரசாங்க மாணியம் | 5,319,165,708 | 5,018,876,106 |
| சேர்ந்த நிதியம் | (868,442,965) | (798,675,248) |
| வாகன மேலதிகம் | 4,674,423 | 4,674,423 |
| மேலதிகம் / குறைபாடு | (73,568,628) | (83,386,233) |
| | **4,381,828,537** | **4,141,489,048** |
| நடைமுறை அல்லாத பொறுப்புக்கள் | | |
| பணிக்கொடைக் கொடுப்பனவுகள் | 29,935,914 | 25,306,495 |
| | **29,935,914** | **25,306,495** |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | | |
| வியாபாரக் கடன்தருநர் | 9,548,279 | 133,034,832 |
| ஏனைய கடன்தருநர் | 4,187,952 | 11,263,607 |
| பாதுகாப்பான வைப்புக்கள் | 3,439,727 | 6,674,200 |
| சேர்ந்த செலவினம் மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய செலவினம் | 7,695,020 | 7,074,921 |
| கிடைத்த முற்பணம் | 541,513 | 1,812,957 |
| வரி ஒதுக்கீடு | **70,164** | **63,097** |
| | **25,482,654** | **159,923,614** |
| | | |
| முழு மூலதன பெருந்தொகை மற்றும் பொறுப்புக்கள் | **4,437,247,105** | **4,326,719,158** |
| | | |

# காசுப் பாய்ச்சல் கூற்று

| 2011 டிசம்பர் 31இல் முடிவடைட்நத ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று | | |
|---|---|---|
| | **31-12-2011** | **31-12-2010** |
| காசுப்பாய்ச்சல் கூற்று | | |
| மொத்த குறைபாடு | (73,498,464) | (83,323,136) |
| | | |
| தேய்மான ஒதுக்கீடுகள் | 83,935,354 | 86,299,992 |
| சேர்ந்த நிதியத்திற்கு கடந்த வருடங்களில் | | |
| செய்யப்பட்ட தேய்மான சீராக்கம் | (10,874,767) | (1,058,056) |
| வாகன விற்பனை இலாபம் | - | (685,405) |
| பணிக்கொடை ஒதுக்கீடு | 4,974,002 | 3,006,358 |
| வருட மூலதன மாற்றத்திற்கு முன்னர் செயற்பாட்டு இலாபம் | **4,536,125** | **4,239,754** |
| | | |
| (அதிகரிப்பு) / குறைவு தொகை | (485,928) | (429,126) |
| (அதிகரிப்பு) / குறைவு கிடைக்க வேண்டிய மீதி | (1,615,292) | (3,566,392) |
| (அதிகரிப்பு) / குறைவு செலுத்த வேண்டிய மீதி | (134,511,124) | 135,745,485 |
| காசு உற்பத்தி செயற்பாடு | **(132,076,219)** | **135,989,721** |
| | | |
| பணிக்கொடை கொடுப்பனவு செலுத்தல் | (344,584) | (457,765) |
| | | |
| | **(132,420,802)** | **135,531,956** |
| பணிக்கொடை கொடுப்பனவு செலுத்தல் | | |
| முதலீட்டு நடவடிக்கைகளில் பெறப்பட்ட காசு பாய்ச்சல் | (126,761,497) | (266,118,169) |
| வாகன விற்பனை | - | 685,405 |
| நிலையான வைப்புக்களில் முதலீடு | 10,000,000 | |
| நிலையான வைப்பு விடுவித்தல் | (38,621) | (10,038,999) |
| | (116,800,118) | (275,471,762) |
| | | |
| நிதியிடல் நடவடிக்கைகளில் பெறப்பட்ட காசுப் பாய்ச்சல் | | |
| சேர்ந்த நிதியத்தில் மாறுதல்கள் | 13,618,515 | 358,758 |
| அரச மாணிம் | 291,189,602 | 142,000,000 |
| | **304,808,117** | **142,358,758** |
| | | |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவை நிகர அதிகரிப்பு | 55,587,197 | 2,418,952 |
| வருட ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்குச் சமமானவை | 3,096,025 | 677,073 |
| வருட இறுதியில் காசு மற்றும் காசுக்குச் சமமானவை | **58,683,222** | **3,096,025** |

சுகததாஸ தேசிய விளையாட்டு பல்கூட்டுத் தொகுதி அதிகார சபை

# கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை.

2011

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல / My No. டீஆர்/ஈ/எஸ்என்எஸ்சீஏ/எப்ஏ/2011 ඔබේ අංකය / உமது இல / Your No. දිනය / திகதி / Date 2012 ஒக்டோபர் 09

தலைவர்,

சுகததாஸா தேசிய விளையாட்டுத் தொகுதி அதிகாரசபை

சுகததாஸா தேசிய விளையாட்டுத் தொகுதி அதிகாரசபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

---

சுகததாஸா தேசிய விளையாட்டுத் தொகுதி அதிகாரசபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள், ஏனைய விளக்கத் தகவல்கள் என்பவற்றின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1999 இன் 17 ஆம் இலக்க தேசிய விளையாட்டுத் தொகுதி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 9(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசிலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விபரமான அறிக்கை அதிகாரசபையின் தலைவருக்கு 2012 யூலை 18 ஆந் திகதி வழங்கப்பட்டது.

1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72 පොල්දූව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone 2887220
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No 2887221
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail oaggov@sltnet.lk

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றது.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

2. நிதிக் கூற்றுக்கள்

---

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களைத் தவிர்த்து 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சுகததாஸா தேசிய விளையாட்டுத் தொகுதி அதிகாரசபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

---

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேறிய பெறுமதி பூச்சியமாக உள்ள ஆனால் 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட அதிகார சபைக்குச் சொந்தமான ரூபா 27,447,432 கிரயமான இயந்திரங்களும் ஏனைய உபகரணங்களும் கணக்கீட்டு நியமம் 18 இன் பிரகாரம் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளில் உள்ளடக்குவதற்கு அதிகாரசபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையின் கணக்குகளின் பிரகாரம் இரண்டு தனியார் நிறுவனங்களுக்கு முறையே ரூபா 4,160 மற்றும் ரூபா 14,757 செலுத்த வேண்டி இருந்ததுடன் அந்த நிறுவனங்களினால் கணக்காய்வுப் பிரிவிற்கு அனுப்பிவைக்கப்பட்ட

உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் மீதிகள் முறையே ரூபா 24,539 மற்றும் ரூபா 345,746 ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) ஐந்தொகையின் பிரகாரம் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 42,959,310 தொகையான பெறவேண்டிய மீதி காணப்பட்டதுடன் இதில் ரூபா 37,398,318 ஆகிய 87% மூன்று ஆண்டுகளுக்கு முன்னரிலிருந்து காணப்பட்டுவரும் மீதியாக இருந்தது. இந்த மீதிகளில் ரூபா 34,769,162 அதாவது 92% ஆனது இரண்டு கடன்பட்டோர்களிடமிருந்து அறவிட வேண்டியிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு விளையாட்டு மைதானத்தினை ஒதுக்கீடு செய்வது தொடர்பாக அதிகாரசபைக்கு ரூபா 4,465,941 தொகை கிடைக்க வேண்டி காணப்பட்டதுடன் அதில் ரூபா 4,309,400 இரண்டு ஆண்டுகளுக்கு மேல் பழைமைவாய்ந்த மீதியாகும்.

(ஈ) 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முற்பணக் கணக்கில் ரூபா 234,020 மீதி காட்டப்பட்டிருந்ததுடன் அதில் 2007 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளுக்குரிய மீதிகள் முறையே ரூபா 23,150 மற்றும் ரூபா 86,800 ஆகும்.

(உ) 2009 சனவரி 30 ஆந் திகதி தேசத்திற்கு மகுடத்திற்காகச் செலுத்தப்பட்ட ரூபா 86,800 தொகையான முற்பணங்கள் மற்றும் 2005 ஆம் ஆண்டின் போது XXXI ஆவது தேசிய மாபெரும் விளையாட்டு விழாவிற்காகப் பங்குபற்றியவர்களின் பிரயாணச் செலவுகளாகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 23,150 தொகையான முற்பணங்களை அறவிடுவதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 42,959,310 தொகையான கடன்பட்டோர் மீதியில் ரூபா 5,865,850 தொகையான நானாவித கடன்பட்டோர் மற்றும் மேலும் 18 நிறுவனங்களிலிருந்து கிடைக்க வேண்டிய மீதியும் உள்ளடக்கப்பட்டிருந்தது. இலங்கை கிரிக்கட் நிறுவனத்திடமிருந்து கிடைக்க வேண்டிய கடன்பட்டோர், மீதி ரூபா 25,573,845 தொகையும் இந்த மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அது மொத்த கடன்பட்டோரின் 60% இனை பிரிதிநிதித்துவப்படுத்தின. அதிகாரசபைக்குச் சொந்தமாகக் காணப்பட்ட ஆர். பிரேமதாஸ விளையாட்டு மைதானம் நீண்டகாலமாக இலங்கை கிரிக்கட் நிறுவனத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த கடன் மீதியினை அறவீடு செய்வதில் அபத்துக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(எ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு விளையாட்டு மைதானத்தினை ஒதுக்கீடு செய்வதற்காக 7 நிறுவனங்களிடமிருந்து அதிகாரசபைக்கு ரூபா 4,486,892 தொகை கிடைக்க வேண்டியிருந்தது.

2.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

-----------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 03 விடயங்களுக்குரிய ரூபா 17,227,876 கூட்டு மொத்த தொகை தொடர்பாக மீதியினை உறுதிப்படுத்துதல்கள் விபரமான பட்டோலை, மெய்மையாய்வு அறிக்கை ஆகியவை சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

(ஆ) அமைச்சினால் 2006 ஆம் ஆண்டிற்கான சாக் விளையாட்டு விழாவிற்காக ரூபா 44 மில்லியன் பெறுமதியான இலத்திரனியல் காலம் காட்டி முறைமை ஒன்று ஒமேகா டயிமிஸ் சிஸ்டம் என்ட் டேவிஸ்டயிம் சிஸ்டம் நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இக் கொள்வனவிற்குரிய எதுவித கோவையும் அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. அமைச்சினால் இம் முறைமையானது அதிகார சபைக்கு முறைப்படியாக ஒப்படைக்கப்பட்டிருக்காததுடன் அது அதிகாரசபையின் நிலையான சொத்துக்களிலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இந்த முறைமை செயற்படாததன் காரணமாக தற்பொழுது அது பாவனையிலிருந்து ஆற்றப்பட்டிருந்தது.

(இ) முன்னைய ஆண்டிற்கான செம்மையாக்கல்கள் தொடர்பாக சரியாக/ தெளிவாக பதியப்படாமை நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள் பேணப்படாமையின் காரணமாக அவற்றின் சரியான தன்மை தொடர்பாக கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ஈ) 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அதிகாரசபையின் நிறுத்திவைத்தல் வைப்புக்களின் பெறுமதி ரூபா 3,439,727 ஆகும். அந்த வைப்புக்கள் வருடாந்தம் புதிய பேரேட்டில் பதியப்பட வேண்டியதுடன் அதன் முன்னைய ஆண்டுக்கான பொழிப்பு அறிக்கை பேரேட்டில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

2.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

---

பின்வரும் சட்டங்கள் விதிகள் முதலியவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க சுற்றுநிருபம் | |
| | 6.5.1 ஆம் பந்தி | வரைபு நிதிக்கூற்றுக்கள் நிதி ஆண்டு முடிவடைந்து 30 நாட்களுக்குள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்படவேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 04 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 756 | மீளாய்வாண்டின் போது ஆர்.பிரேமதாஸா கிரிக்கட் மைதானத்தின் ரூபா 781,784,954 தொகையான நிலையான சொத்துக்கள் மற்றும் ரூபா 2,149,491 தொகையான பட்டோலைப் பொருட்கள் தொடர்பாக மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் | கணனி மற்றும் மென்பொருள் தொடர்பாக தனியான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2011 யூலை 25 ஆந் திகதிய டீஎம்எஸ்/ஈ4/40/5/252/1 ஆம் இலக்க கடிதம் | அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் 26 கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர் பதவிகளின் வெற்றிடத்திற்காக ஆட்சேர்ப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தும் ஆட்சேர்ப்பு நடைமுறையினை அங்கீகரிப்பதற்கு முன்னர் அதாவது 2011 நவம்பர் 15 ஆந் திகதி 25 பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர். |

3. நிதிசார் மீளாய்வு

--------------------------------

3.1 நிதிசார் விளைவுகள்

-----------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அதிகாரசபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதிசார் விளைவுகள் ரூபா 76,090,410 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 82,603,520 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் விளைவுகள் ரூபா 6,513,110 முன்னேற்றத்தினை சுட்டிக்காட்டியது.

3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

-----------------------------------------------------------------

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அதிகார சபையின் வருமானக் கூற்றுக்களினை மீளாய்வு செய்த போது கடந்த ஆண்டுடன் ஒப்பிடப்பட்ட முன்னைய ஆண்டிற்கான ஒப்பிடப்பட்ட முன்னைய ஆண்டிற்கான வருமானச் செலவுகளை மேற்கொள்வதற்காக அரசாங்க மானியமாக வழங்கப்பட்ட பணத்தில் ரூபா 4,900,000 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டதுடன் அது 7% ஆன அதிகரிப்பாகும். அதே போல் அதிகாரசபையின் செயற்பாட்டு வருமானம் ரூபா 7,397,134 ஆல் அதிகரித்திருந்ததுடன் செயற்பாட்டுச் செலவுகள் ரூபா 5,784,024 ஆல் அதிகரித்திருந்தது. இந்த வருமான அதிகரிப்புச் சதவீதம் 12% ஆக இருந்ததுடன் செலவு அதிகரிப்பச் சதவீதம் 2% மாத்திரமாகும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------

4.1 செயலாற்றல்

----------------------

அதிகாரசபையினால் விளையாட்டு மைதானங்களின் வருமானத்தினை அதிகரிப்பதற்கும் விசேடமாக திறந்த மற்றும் உள்ளக விளையாட்டு அரங்குகளின் விளம்பரப் பலகையில் காட்சிப்படுத்துதல் மற்றும் அவ்வாறான செயற்பாடுகளின் மூலம் புதிய வருமான வாய்ப்பினை ஏற்படுத்திக் கொள்வதற்கும் முறைப்படியாக செலவு முகாமைத்துவத்தினை மேற்கொள்வதற்கும் போதியளவில் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் போதும் கடந்த 2 ஆண்டுகள் காலத்திலும்

அதிகாரசபையின் ஒவ்வொரு விளையாட்டு மைதானத்திலிருந்தும் உழைக்கப்பட்ட வருமானம் மற்றும் செலவுகள் தொடர்பான அவதானிக்கப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

- உள்ளக விளையாட்டரங்கில் ஒவ்வொரு ஆண்டிற்குமான வருமானம் அதிகரிக்கும் வேகத்தினை விட அதிகவேகத்தில் செலவுகள் அதிகரித்திருந்தன.
- போகம்பர விளையாட்டரங்கிலும் வருமான மட்டம் 2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறைந்து செல்லும் போக்கு காணக்கூடியதாக இருந்ததுடன் செலவுகள் மிகவும் அதிக வேகத்தில் அதிகரித்திருந்தது.
- பெலியத்த விளையாட்டரங்கின் ஒவ்வொரு ஆண்டிலும் வருமானத்தினை மிகைத்த செலவு 70% இலிருந்து 100% வரையான அதிகரிப்பினைக் காட்டியது.

4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை
-----------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 ஆம் ஆண்டில் எழுதப்பட்ட ரூபா 524,729 பெறுமதியான 07 காசோலைகளை வழங்குனர்களுக்கு ஒப்படைத்தல் 1 இலிருந்து 3 மாதங்கள் வரையான காலம் தாமதிக்கப்பட்டமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) அதிகாரசபையினால் நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான 06 வாகனங்கள் விளையாட்டு அமைச்சுக்குச் சொந்தமான 02 வாகனங்கள் உரிமை தொடர்பான விபரம் இல்லாத 02 கை உழவு இயந்திரங்கள் என்பன தற்பொழுது பயன்படுத்தப்பட்டுவருவதுடன் அந்த வாகனங்கள் இதுவரை சட்டரீதியாக அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களில் காணியின் பெறுமதியாகக் காட்டப்பட்டுள்ள ரூபா 135,000,000 தொகை நகர அபிவிருத்தி அதிகார சபைக்குரியது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டதுடன் விளையாட்டு மைதானத்தின் உரிமையினை அதிகார சபைக்கு மாற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4.3 செயற்பாட்டுச் செயற்திறனின்மை

-------------------------------------------------------

மீளாய்வாண்டின் போது அதிகாரசபைக்குச் சொந்தமான விளையாட்டு ஹோட்டலை குத்தகைக்கு வழங்குவது தொடர்பாக பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(அ) அதிகாரசசைப்குச் சொந்தமான விளையாட்டு ஹோட்டல் ஒரு மாதத்திற்கு ரூபா 760,000 படி 03 ஆண்டு காலத்திற்காக தனியார் நிறுவனத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்கு 2010 ஒக்டோபர் 18 ஆந் திகதி இடம்பெற்ற கேள்விச் சபைக் கூட்டத்தின் போது தீர்மானம் எடுக்கப்பட்டு 2010 நவம்பர் 15 ஆந் திகதி குத்தகை உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டிருந்தது. குத்தகை தாரரினால் மேற்கொள்ளப்பட்ட பிழையான நடவடிக்கையின் காரணமாக குத்தகை உடன்படிக்கையினை கைவிடுவதாக விளையாட்டு அமைச்சு செயலாளரினால் தலைவருக்கு தெரியப்படுத்ததன் காரணமாக 2010 திசெம்பர் 16 ஆந் திகதி குத்தகை உடன்படிக்கை இரத்துச் செய்யப்படுவதாக கேள்விதாரருக்கு தெரியப்படுத்தப்பட்டது.

(ஆ) செயலாளரினால் பின்னர் தெரியப்படுத்தப்பட்டதன் பிரகாரம் 2011 மார்ச் 23 ஆந் திகதி இடம் பெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டு அதிகாரசபையினால் ஹோட்டனினை நடாத்தவதற்குச் தீர்மானிக்கப்பட்டு அதிகாரசபையினால் ஹோட்டல் நடாத்தப்பட்டு வந்திருந்தது. 2011 ஆம் ஆண்டின் போது ஹோட்டல் நடாத்தப்பட்டு வந்திருந்தது. ரூபா 6,961,761 தொகை மொத்த வருமானமாக உழைக்கப்பட்டிருந்தும் உடன்படிக்கை செயற்படுத்தப்படாததன் காரணமாக அதிகாரசபையினால் ரூபா 2,158,239 தொகையான வருமானம் இழக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மீண்டும் ஹோட்டலை குத்தகைக்கு கொடுப்பதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

4.4 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

-------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2009 ஆம் ஆண்டின் போது ரூபா 4,912,403 தொகை செலவு செய்து வாகனத்தில் பொருத்துவதற்காக இலத்திரனியல் இடையூறு இயந்திரம் தனியார் கம்பனியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அதில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) கொள்வனவு செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் இந்த உபகரணத்தில் பின்வரும் வசதிகள் உள்ளன என்று தொழில்நுட்ப வசதிகள் இல்லை என்பது உள்ளகக் கணக்காய்வுப் பரிசோதனையின் வெளிப்படுத்தப்பட்டது.

- இலக்கத் தகட்டினை இனங்காணும் முறைமை
- மோட்டார் சைக்கிள் மற்றும் ஏனைய வாகனங்களை சுயமாக இனங்காண்பதற்கு அதிலுள்ள உணர்ந்தறியும் தன்மை
- எந்த வகுப்பினைச் சார்ந்த அல்லது எவ்வகையான வாகனத்தினையும் சுயமாக இனங்காண்பதற்கு அதில் காணப்படும் உணர்ந்தறியும் தன்மை
- வாகனம் வெளியில் சென்றதன் பின்னர் வீதித் தடைக் கதவு அல்லது ஏனைய கதவு சுயமாக மூடுவதற்கு இந்த வாகன அவதானிப்பு உபகரணத்தினைப் பயன்படுத்துதல்

(ii) அதிகாரசபையின் தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் 2012 சனவரி 13 ஆந்திகதிய கடிதத்தின் பிரகாரம் இந்த உபகரணத்தினை புதுப்பிப்பதற்காக தனியார் நிறுவனம் ஒன்றிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. துணைக் கம்பனியாகிய இந்த மூலக் கம்பனியின் நிறுவனம் உரிய தொடக்க முறைமைக்குப் பதிலாக மாதிரி முறைமை ஒன்று அதிகார சபையினால் இம் முறைமை செயற்பாட்டில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. அடிப்படை முறைமை சிங்கப்பூருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள போதிலும் அதனை திருத்தம் செய்ய முடியாது என தெரிவிக்கப்பட்டுள்ளதாக தலைவரினால் எனக்கு அறிவிக்கப்பட்டது.

(ஆ) 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 430,936 பெறுமதியான 42 வகையான பொருட்கள் அசைவற்ற பொருட்களாக களஞ்சியத்தில் காணப்பட்டன. இப்பொருட்களை விற்றுத்தீர்ப்பதற்காக அதிகார சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4.5 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகார சபையின் வளங்கள்
---

ஆர். பிரேமதாஸா விளையாட்டு மைதானம் இலங்கை கிரிகட் நிறுவனத்திற்கு குத்தகைக்கு வழங்கும் குத்தகை உடன்படிக்கையில் பின்வரும் பற்றாக்குறைகள் அவதானிக்கப்பட்டன.

| | குத்தகை உடன்படிக்கையிலுள்ள நிபந்தனை | பற்றாக்குறை |
|---|---|---|
| | --------------------------------------------------------- | ------------------------------------- |
| (அ) | உடன்படிக்கையின் 4 (கியூ) ஆம் உடன்படிக்கையின் பிரகாரம் ஆர்.பிரேமதாஸா விளையாட்டு மைதானத்தில் சேவையாற்றிவரும் விளையாட்டு மைதான ஊழியர்கள் ஆகக் குறைந்தது 20 பேர் இலங்கை கிரிக்கட் நிறுவனத்தினால் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. | ஊழியர்களில் எவரும் இலங்கை கிரிக்கட் நிறுவனத்தினால் சேர்த்துக்கொள்ளப்படாமையின் காரணமாக உடன்படிக்கையின் தேவைப்பாடு மீறப்பட்டிருந்ததுடன் விளையாட்டு மைதானத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்டு அது தொடர்பான விசேட அறிவினைக் கொண்ட 17 ஊழியர்களுக்காக ரூபா 4,004,430 தொகையினை மீளாய்வாண்டின் போது அதிகாரசபையினால் செலவு செய்ய வேண்டி ஏற்பட்டது. |
| (ஆ) | உடன்படிக்கையின் 4(எஸ்) ஆம் பிரிவின் பிரகாரம் விளையாட்டு மைதானத்தின் அனைத்து கட்டிடங்கள் மற்றும் காணிக்காக குத்தகை மதிப்பீட்டாளரின் ஆலோசனை பெற்றுக் கொள்ளப்பட்டு குத்தகைதாரரினால் முழுமையான காப்புறுதி பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. | மீளாய்வாண்டு வரையும் அவ்வாறான காப்புறுதி உள்ளடக்கம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 30 ஆண்டுகளாகிய நீண்ட காலத்திற்கு குத்தகைப் பெறுமதி ஒரு காலாண்டிற்கு ரூபா 750,000 ஆக நிரந்தரமாகப் பேணப்படுவதற்கு தீர்மானித்தல் | பணப் பெறுமதி குறைந்து செல்வதன் அடிப்படையில் ஏற்படும் எதரிகால பாதிப்பு நிலைமையினைத் தவிர்த்துக்கொள்வதற்காக குத்தகைப் பெறுமதிக்கு செய்ய வேண்டிய திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | உடன்படிக்கையின் 5(ஐ) பிரிவின் பிரகாரம் விளையாட்டு மைதானத்தின் அனைத்து சொத்துக்களும் பௌதீக மெய்மையாய்வு செய்யப்பட்டு இருப்பேடு தயாரிக்கப்பட்டு குத்தகை தாரருக்கு பிரதியினை வழங்குதல். | சொத்துக்கள் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |

5. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

----------------------------------------------------------------

5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

----------------------------------------------------------

2004 பெப்ரவரி 24 ஆந் திகதிய 01/2004 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2011 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2001 பெப்ரவரி 28 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2011 ஆம் ஆண்டிற்கான வரைபு நிதிக்கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 04 ஆந் திகதியே கணக்காய்விற்கச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

5.2 கூட்டிணைந்த திட்டம்

----------------------------------------

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றுநிருபத்தின் பிரகாரம் நிறுவனத்தின் வளங்கள் அமைப்பு வரைபடம் கடந்த மூன்று ஆண்டுகளுக்கான செயற்பாட்டு விளைவுகள், முகாமையாளர்கள் கடமைகளும் பொறுப்புக்களும், செயலாற்றல் என்பன தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் 2011 ஆம் ஆண்டிற்காக கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்படவில்லை.

5.3 முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களை நடாத்துதல்

------------------------------------------------------------------------------------------------------------------------

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 7.4.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஒவ்வொரு மூன்று மாதத்திற்கு ஒரு தடவை கூட்டப்பட வேண்டிய போதிலும் 2011 ஆம் ஆண்டிற்கான இரண்டு கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

------------------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது தலைவருக்குத் அறிவிக்கப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஆ) பொருள் இருப்பு பதிவேட்டினைப் பேணுதல்

(இ) களஞ்சியக் கட்டுப்பாடு

(ஈ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் சுற்றுநிருப அறிவுறுத்தல்களுடன் இணங்காமை

(உ) கடன்பட்டோரிடமிருந்து பணத்தினை அறவிடுதல்

(ஊ) வருமான முகாமைத்துவம்

(எ) நாட்குறிப்புக்களைப் பேணுதல்

எச்.ஏ.எஸ். சமரவீர

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

***Nr/sh***